RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

9842961596, 9384761596
ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ் சைவம்
HOTEL SREE PALANIS Veg
உணவு ஆர்டர் தேவைக்கு : 80980 97273
மேல்கரை மெயின் ரோடு - மானாமதுரை

மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்

கார்த்திக் மருத்துவமனை
மனோ CT ஸ்கேன்
24 மணி நேர சேவை
சிவகங்கை
No 28 மதுரை ரோடு - சிவகங்கை 630 561

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 281 | அக்டோபர்.12 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “கிராமத்தின் வலிமைதான் மாநிலத்தின் வலிமை” : கிராம சபைக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு!

சென்னை, அக்.12-

நம்முடைய பிள்ளைகள் படித்து முன்னேறி வரவேண்டும் என்று புதுமைப்பெண் ரூ தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்திலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கிராம ஊராட்சிகளில் நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் காணொலி வாயிலாக கலந்து கொண்டு ஆற்றிய உரை:

நம்முடைய நாட்டின் முதுகெலும்பாக இருப்பது, கிராமங்கள்தான்! அதனால்தான், நம்முடைய தேசத்தந்தை காந்தி அவர்கள், “விடுதலை இந்தியாவின் வலிமை கிராமங்களில்தான் இருக்கிறது” என்று சொன்னதோடு, “இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது” என்று ஆணித்தரமாக சொன்னார்.

அப்படிப்பட்ட கிராமங்களை முன்னேற்ற வேண்டும் கிராமப் பொருளாதாரத்தை வலிமையாக்க வேண்டும் ரூ கிராம நிர்வாகங்கள் வலிமையாக இருக்க வேண்டும் என்று ஜனநாயகப்பூர்வமாக சிந்தித்து, நாம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

இந்தத் திட்டங்கள்தான் தமிழ்நாட்டின் கிராம ஊராட்சிகளின் மேம்பாட்டுக்கு அடிப்படை! அதனால்தான், நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, தொடர்ந்து கிராம சபைக் கூட்டங்களில் பங்கெடுத்தேன்.உங்கள் ஆதரவோடு முதலமைச்சரான பிறகு, இப்போது மூன்றாவது முறையாக கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்கிறேன்.

இன்னும் பெருமையோடு சொல்கிறேன்ஞ் வேறெந்த முதலமைச்சரும் இப்படி கிராம சபைக் கூட்டங்களில் பங்கேற்றதில்லை! அதிலும், தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இவ்வளவு பெரிய அளவில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊராட்சிகளையும் இணைய வசதி மூலமாக இணைத்து, கிராம சபைக் கூட்டத்தை நடத்துவது இதுதான் முதல்முறை!

இதை சாத்தியப்படுத்திய மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் அதிகாரிகளுக்கும் பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

அதேபோல, நம்முடைய ஜனநாயக அமைப்பின் அடித்தளமான கிராமங்களை உயர்த்த பணியாற்றிவரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் துறையின் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களுக்கும், பொன்னையா உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும் பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

என்றைக்கும் மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றும் இந்த எண்ணத்தை நமக்குள் விதைத்தவர், தமிழ்நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்கள்! அவர்தான், “மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்கு சேவை செய்” என்று நமக்கு கட்டளையிட்டு, நம்மையெல்லாம் ஆளாக்கியவர்!

பேரறிஞர் அண்ணா காட்டிய பாதையில்தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சமூகநீதி, சமத்துவம், சமதர்மம் போன்ற உயர்ந்த இலட்சியங்களைச் செயல்படுத்துவதை நோக்கமாக கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகளை வழி நடத்தினார்.

தலைவர் கலைஞரின் வழித்தடத்தில்தான், நம்முடைய திராவிட மாடல் அரசும் பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி, சமத்துவம், சமதர்மம் மற்றும் சமூகநீதியை நிலைநாட்டி வருகிறது.

நாட்டிற்கே வழிகாட்டுகின்ற மாதிரியான ஏராளமான திட்டங்களை, நீங்கள் உருவாக்கிய நம்முடைய திராவிட மாடல் அரசு உருவாக்கியிருக்கிறது!

கிராமப்புற பொருளாதாரத்தையும், பெண்களின் முன்னேற்றத்தையும் சாத்தியப்படுத்திய மாபெரும் திட்டம், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் திட்டம்!

உங்களில் நிறைய பேர் சுய உதவிக்குழுக்களால் பயனடைந்திருப்பார்கள். துணை முதலமைச்சராக இருந்தபோ‘து, நானே பல மணிநேரம் மேடைகளில் நின்று சுழல்நிதி வழங்கியிருக்கிறேன்.

இதன் அடுத்தக்கட்ட பாய்ச்சலாகதான், மகளிர் உரிமைத் தொகை வழங்குகிறோம்! நீங்கள் எல்லோரும் கட்டணமில்லாமல் பேருந்தில் செல்கிறீர்களே, அந்த விடியல் பயணத் திட்டம் பெண்கள் முன்னேற்றத்தில் எவ்வளவு பெரிய பங்களிப்பை செலுத்துகிறது என்று எண்ணிப் பாருங்கள்ஞ்

நீங்கள் காலையில், சீக்கிரம் வேலைக்கு போகவேண்டும் என்று அவசர அவசரமாக கிளம்புவீர்கள்.. அதற்கு நடுவில் சமையல் செய்யவேண்டும்.. ஆனால், அந்த சுமையை குறைக்க ரூ அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற நம்முடைய குழந்தைகளுக்கு சத்தாகவும் ரூ சுவையாகவும் காலை உணவு வழங்குகிறோம்!

நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் காலேஜ் முடித்துவிட்டு வேலைக்குப் செல்வதற்கு தயாராக இருக்கின்ற அளவுக்கு ரூ நான் முதல்வன் திட்டத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குகிறோம்!

நம்முடைய பிள்ளைகள் படித்து



முன்னேறி வரவேண்டும் என்று புதுமைப்பெண் ரூ தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். இப்படி, ஒவ்வொரு துறையிலும், பல திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது!

இதையெல்லாம் முத்திரைத் திட்டங்கள்! இதேபோல, கிராம வளர்ச்சிக்கு என்று பல திட்டங்களை செயல்படுத்துகிறோம்! கிராம மக்கள் தங்களுடைய ஊராட்சி நிர்வாகத்தில் பங்கேற்கவும், வளர்ச்சிப் பாதையில், கிராம ஊராட்சியை கொண்டு செல்லவும், உரிய உரிமைகளை அளிக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய அரசின் நோக்கம்!

அதற்காக, ஆண்டுதோறும் ஆறு முறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது. இந்தக் கிராமசபைக் கூட்டங்கள்தான், ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை உணர வைக்கின்ற முக்கிய தருணம்!

நம்முடைய கிராமங்களின் தற்போதைய தேவைகள், வளர்ச்சி இலக்குகள் மற்றும் நலன்கள் குறித்து நேரடியாக விவாதித்து, தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற ஒரு விழாவாக கொண்டாடப்பட வேண்டும்.

நம்முடைய திராவிட மாடல் அரசு சமூகநீதி, சமத்துவத்தை நிலைநாட்ட, சுயமரியாதை அடிப்படையிலான சமூகத்தை உருவாக்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாகதான், குடியிருப்புகள், சாலைகள், தெருக்களில் இழிவான தன்மையோடு சாதிப் பெயர்கள் இருந்தால், அதை மாற்றி பொதுப் பெயர்களை சூட்டும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும், ‘நம்ம ஊர், நம்ம அரசு’ என்ற பெயரில், கிராம சபையில் மக்கள் கலந்தாலோசித்து, 3 முக்கிய தேவைகளைத் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

அப்படி கண்டறியப்படும் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்படுவதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்யவேண்டும்.

குடிசையில்லா தமிழ்நாடு என்ற இலக்கை எட்டிவிடும் வகையில், ‘கலைஞரின் கனவு இல்லம்’ என்ற புரட்சிகரத் திட்டம் துவங்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில், ஏழாயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு முடிவெடுத்து, 2024 25ல் இதுவரை, 99 ஆயிரத்து 453 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

202526ல், இன்றைய நிலையில், 78 ஆயிரத்து 312 வீடுகள் கூரை மட்டம் நிலைக்கு மேல் முன்னேற்றத்தில் இருக்கிறது. அதேபோல, சாலை வசதிகளை பொறுத்தவரைக்கும், 2022ரூ23ஆம் ஆண்டில் அறிமுகமான முதல்வரின் கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ரூ நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி ரூ உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ 21 ஆயிரம் கிலோ மீட்டருக்கும் அதிகமான சாலைகள் மற்றும் பாலங்களை மேம்படுத்தியிருக்கிறோம்!

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ், கிராமங்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் முக்கிய முயற்சியாக, சாலை, குடிநீர், பள்ளிக்கூடங்கள், நூலக வசதிகள் போன்ற சேவைகள் விரிவாக்கப்படுகிறது. தாயுமானவர் திட்டத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது!

இவ்வளவு திட்டங்களையும், முன்னெடுப்புகளையும் நம்முடைய அரசு செய்து கொண்டு வந்தாலும், குடிமக்களாக ஒவ்வொரு தனிநபருக்கும் பல பொறுப்புகள் இருக்கிறது! அதையெல்லாம் நாம் சரியாக செய்து, நாம் தான் நம்முடைய கிராமத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு போகவேண்டும்! உங்கள் முதலமைச்சராக, உங்களில் ஒருவனாக அதற்காக சில விஷயங்களை சொல்ல விரும்புகிறேன்ஞ்

ஒவ்வொரு வீட்டிலும், குழந்தைகள் படிப்பதை நாம் எல்லோரும் உறுதி செய்யவேண்டும்! எங்கேயாவது ரூ யாராவது ரூ குழந்தை தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தினால், உடனே மாவட்ட நிர்வாகத்துக்கு தகவல் கொடுத்து, அவர்களை மீட்கவேண்டும்!

இதை, கிராம ஊராட்சிகள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் என்று எல்லோரும் பொறுப்புடன் கண்காணிக்க வேண்டும். அடுத்து, கிராம மேம்பாட்டுக்கு முக்கியமான திட்டமான, நூறு நாள் வேலைத் திட்டம்! இந்தத் திட்டம் முறையாக செயல்பட்டு வருவதை கண்டிப்பாக உறுதி செய்யவேண்டும்! இந்தத் திட்டத்தில், வரவு செலவு எவ்வளவு? எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது? என்று அனைத்துத் தகவல்களும் வெளிப்படையாக இருக்க வேண்டும்.

அடுத்து, ஒவ்வொரு தனிமனிதருக்கும், சமூகப் பொறுப்பு இருக்கவேண்டும்! நம்முடைய வீடு குப்பைக் கூளமாக இருந்தால், சும்மாவா இருப்போம்? நம் எல்லோருடைய வீடும் சேர்ந்ததுதான் நம்முடைய கிராமம்ஞ் அதை சுத்தமாக வைத்துக் கொள்கின்ற பொறுப்பு நமக்குதான் இருக்கிறது! முடிந்த அளவுக்கு பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும்ஞ் குப்பைகள் ரூ ஊராட்சிகளில் வருகின்ற பேட்டரி வண்டிகளில், மக்கும் குப்பை மக்காத குப்பை என்று தனித்தனியாக பிரித்துப் போடவேண்டும். கண்ட இடத்தில் குப்பை போடுவதை தவிர்க்க வேண்டும்!

ஊராட்சி நிர்வாகங்களை சேர்ந்தவர்கள் குப்பைகளை பிரிப்பது, கழிவுநீர் மேலாண்மை பற்றியெல்லாம், மக்களுக்கு தெளிவாக எடுத்துச் சொல்லி, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்! என்னடா, இதையெல்லாம் சிறிய சிறிய விஷயம் தானே, இதையெல்லாம் முதலமைச்சர் சொல்ல வேண்டுமா என்று நினைக்கிறீர்களா? சிறிய சிறிய விஷயங்களை நாம் கரெக்டாக செய்தாலே, பெரிய பெரிய நன்மைகள் நிச்சயம் உண்டாகும்! நோயற்ற வாழ்வுதான் குறைவற்ற செல்வம் என்று எல்லோருக்குமே தெரியும்! இந்த நோயற்ற வாழ்வுக்கு சுகாதாரம்தான் அடிப்படை!

மருத்துவ அலுவலர்களும், ஊராட்சி நிர்வாகமும் ஒருங்கிணைந்து செயல்பட்டால், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு, கிராம மக்களுடைய ஆரோக்கியம் மேம்படும்! அதனால், நம்முடைய கிராமங்களை சுத்தமாக வைத்துக் கொள்வதில் யாருக்கும் அலட்சியம் இருக்கக் கூடாது!

அடுத்து, புவி வெப்பமடைதல்! உங்களுக்கு நன்றாக தெரியும்ஞ் இப்போதெல்லாம் முன்பு போல சரியான நேரத்துக்கு ரூ சரியான அளவுக்கு மழை பெய்வதில்லை! இதற்குக் காரணம், காலநிலை மாற்றம்! இதுபற்றிய விழிப்புணர்வும், கிராம மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டும்!

அடுத்து, மக்களுடைய முக்கிய பிரச்சினையாக இருப்பது, தண்ணீர் பற்றாக்குறை! “பணத்தைத் தண்ணியாக செலவழிக்கிறார்கள்” என்று சில பேர் சொல்லுவார்கள்ஞ் உண்மையில், “தண்ணியைத் தான் பணம் போல பார்த்து, பார்த்து செலவழிக்க வேண்டும்”. தண்ணீர் பற்றாக்குறை வராமல் இருப்பதற்கு மழைநீர் சேகரிப்பு மிகவும் அவசியமானது! இதனால்தான், நிலத்தடி நீர்வளம் மேம்பட்டு, கிராமங்களுக்கு நீண்டகால நீர்ப் பாதுகாப்பு ஏற்படும்! இதற்கான பொறுப்பு, நம்முடைய எல்லோரிடமும் தான் இருக்கிறது!

எனவே, இதற்காக அரசும், ஊராட்சிகளும் எடுக்கின்ற முயற்சிகளுக்கு நீங்கள் எல்லோரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மழைக்காலம் தொடங்கப் போகிறது! டெங்கு, சிக்குன் குனியா போன்ற நோய்களைத் தடுக்கின்ற சுகாதார நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். வடகிழக்கு பருவமழைக்கு முன்பே, அனைத்து ஊராட்சிகளிலும், அவசர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். வீதிகள், குடிநீர், மின்சாரம், வடிகால் போன்ற அடிப்படை சேவைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, அவசரத் திட்டங்களை உடனே செயல்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சியிலும், சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் சிறப்புக் குழுக்களை அமைத்து, அவசர கால நடவடிக்கைகளை திட்டமிடவேண்டும். இதனால், பேரிடர் நேரங்களில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை குறைக்கலாம்,

அடுத்து, நான் முக்கியமாக சொல்ல விரும்புவது கிராம ஊராட்சிகளின் நிர்வாகம், நிதி மேலாண்மை வெளிப்படையாக இருக்க வேண்டும். கிராம சபை மூலம் வரவு ரூ செலவு கணக்குகள் மக்களிடம் விளக்கப்பட்டு, அவர்களின் ஒப்புதலோடு செயல்படவேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சியும் எப்போது, எவ்வளவு செலவிட்டது என்று மக்கள் தெரிந்து கொள்கின்ற வகையில் தகவல்கள் பகிரப்படவேண்டும். இந்தக் கூட்டத்தில், நீங்கள் முன்வைக்கின்ற ஒவ்வொரு பரிந்துரையும் பல்வேறு திட்டங்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

நம்முடைய கிராமங்கள்தான் எதிர்கால வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்ற முக்கிய அங்கமாக இருந்து வருகிறது. நம்முடைய திராவிட மாடல் அரசை பொறுத்தவரைக்கும், மக்கள் பங்கேற்போடு வளர்ச்சியை உறுதிசெய்கின்ற அரசு இது!

“கிராமத்தின் வலிமைதான் மாநிலத்தின் வலிமை” என்று நம்முடைய செயல்பாடுகளால் நிரூபித்துக் காட்டுவோம்!

## பழனிசாமியை முதல்வராக்கவா விஜய் கட்சி ஆரம்பித்தார்? டிடிவி தினகரன் விமர்சனம்

சென்னை: அக்.12-

“அதிமுகவுடன் விஜய் கூட்டணி சேர்ந்தால் பாஜகவைக் கூட பழனிசாமி கழற்றிவிடத் தயாரக இருப்பார். ஆனால் விஜய் வருவாரா என்பது தெரியாது. பழனிசாமியை முதல்வர் ஆக்குவதற்காகவா விஜய் கட்சியை ஆரம்பித்தார்.. அவரது தொண்டர்கள் அதை ஏற்பாரா? இல்லை விஜய் வந்து எடப்பாடி பழனிசாமியை முதல்வராக தூக்கி பிடிப்பாரா?” என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “ 2024 மக்களவைத் தேர்தலின் போது பாஜக கூட்டணியில் இருந்து, அதிமுக ஏன் வெளியேறியது. அது பாஜகவுக்கு முக்கிய தேர்தலாகவும் அமைந்திருந்த சமயத்தில், கூட்டணியை விட்டு வெளியே வந்து பாஜவுக்கு எதிராக பேசினார்கள். பழனிசாமி நம்பக தன்மையற்றவர், அவருக்கு துரோகத்தை தவிர எதுவும் தெரியாது.

அதிமுகவுடன் விஜய் கூட்டணி சேர்ந்தால் பாஜகவைக் கூட பழனிசாமி கழற்றிவிடத் தயாரக இருப்பார். ஆனால் விஜய் வருவாரா என்பது தெரியாது. பழனிசாமியை முதல்வர் ஆக்குவதற்காகவா விஜய் கட்சியை ஆரம்பித்தார்.. அவரது தொண்டர்கள் அதை ஏற்பாரா? இல்லை விஜய் வந்து எடப்பாடி பழனிசாமியை முதல்வராக தூக்கி பிடிப்பாரா?

வரவிருக்கும் தேர்தலில் அதிமுக கூட்டணி வெறும் 15 சதவீதத்துக்கு கீழ் தான் வரும். பழனிசாமி தான் முதல்வர் வேட்பாளர் என்று சொன்ன போதில் இருந்தே அந்தக் கூட்டணி பலவீனமாகி கொண்டு தான் இருக்கிறது. பாஜகவும் இதை கருத்தில் கொள்ள வேண்டும்.

தன் கட்சி தொண்டர்களை வைத்தே தவெக கொடியை தூக்கிப் பிடிக்க வைத்துள்ளார் எடப்பாடி பழனிசாமி. இதில் இருந்தே தெரிகிறது, விஜய்யின் தலைமையை ஏற்று கூட்டணிக்குச் செல்ல பழனிசாமி தயாராகிவிட்டார். அந்த அளவிற்கு அதிமுக பலவீனமாகிவிட்டது. எங்கள் கூட்டணி குறித்து டிசம்பர் மாதத்துக்குள் தான் முடிவெடுக்க முடியும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பெண் பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுப்பு: பிரதமரை விமர்சித்த ராகுல் காந்தி

புதுடெல்லி: அக்.12-

டெல்லியில் நடந்த ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முட்டாகியின் பத்திரிகையாளர் சந்திப்பில் பெண் பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட விவகாரம் சர்ச்சையை கிளப்பியுள்ள நிலையில், இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெளியிட்ட எக்ஸ் பதிவில், “பெண் பத்திரிகையாளர்களை பொது மன்றத்தில் இருந்து விலக்க அனுமதிக்கும்போது, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் மிகவும் பலவீனமானவர் என்று நீங்கள் கூறுகிறீர்களா?. நமது நாட்டில், பெண்களுக்கு எல்லா இடங்களிலும் சமமாகப் பங்கேற்க உரிமை உண்டு.



இதுபோன்ற பாகுபாட்டை எதிர்கொள்ளும் போது நீங்கள் அமைதியாக இருப்பது பெண் சக்தி குறித்த உங்கள் முழக்கங்களின் வெறுமையை அம்பலப்படுத்துகிறது" என்று பிரதமர் மோடியை விமர்சித்துள்ளார்.

ராகுல் காந்தியின் விமர்சனத்துக்கு பதிலளித்த பாஜக செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி, "இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் நெருங்கி வருவதைக் கண்டு பாகிஸ்தானும் ராகுல் காந்தியும் பதறுகிறார்கள். மீண்டும் ராகுல் காந்தி போலி செய்திகளைப் பரப்புவதன் மூலம் பாகிஸ்தானுக்காகப் போராடுகிறார்.

ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சருடன் இந்தியப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட பொது நிகழ்வில் பெண் பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டனர். ராகுல் காந்தி குடும்பம் இந்தியா ஆப்கானிஸ்தான் உறவுகளை எதிர்ப்பதன் மூலம் பாகிஸ்தானை ஆதரிக்கிறது. காங்கிரஸ் பாகிஸ்தானின் சிறந்த நண்பர்’ எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தலிபான் அமைச்சரின் பத்திரிகையாளர் சந்திப்பில் பெண் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படாதது குறித்து கருத்து தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை அமைச்சகம், இதில் இந்தியாவுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று கூறியது.




## பெருங்களத்தூரில் உள்ள செயிண்ட் ஜான்ஸ் மெட்ரிக் பள்ளியில்

# எல்.கே.ஜி முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் 100க்கும் மேற்பட்ட அறிவியல் கண்டுபிடிப்புகளை காட்சிபடுத்தியது பெற்றோர்களை வெகுவாக கவர்ந்தது

பெருங்களத்தூர், அக்.12-

செங்கல்பட்டு மாவட்டம், பெருங்களத்தூரில் உள்ள செயிண்ட் ஜான்ஸ் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளியில் மாணவர்களிடம் புத்தாக்க கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் விதமாக அறிவியல் கண்காட்சி நடைப்பெற்றது. இதில் விவசாய மேம்பாட்டுக்கான வழிகள், காற்றின் மாசு மற்றும் அதனை சீரமைக்க எளிய முறைகள் , நெருப்பின் வேதியல் விஞ்ஞானம், மற்றும் நியூக்ளியர் அணு வெடித்து சிதறுவது போன்ற படைப்பினை தத்ரூபமாக செய்து விளக்கமளித்தனர்.

பல்வேறு சென்சார் கருவிகள் பொருத்திய படைப்புகளை காட்சிப்படுத்தி அசத்தி இருந்தனர்.

இவ்வாறு அறிவியல் மற்றும் ரோபாட்டிக்ஸ் துறைகளில்,எல்.கே.ஜி. முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவ மாணவியர் பங்கேற்று தங்கள் படைப்பாற்றல் மூலம் தனி திறனை வெளிப்படுத்தியிருந்தனர்.

அறிவியல் கண்காட்சியை மாணவர்கள், பெற்றோர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஆரவமுடன் பார்வையிட்டனர்.

பள்ளி தாளாளர் பாக்கியராணி, மூத்த பள்ளி முதல்வர் விஜயராணி, பள்ளி முதல்வர் செல்வராணி, பள்ளி துணை முதல்வர் கீதா ஆகியோர் கண்காட்சியை பார்வையிட்டு மாணவர்களை வாழ்த்தினர்.

இறுதியாக சிறந்த படைப்புகளை மாணவர்களுக்கு பள்ளி நிர்வாகத்தினர் பரிசுகளை வழங்கி பாராட்டினர்.



# சேம்பார் நடுநிலைப் பள்ளியில் மரம் நடும் விழா

காளையார் கோவில், அக்.12-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சுற்றுச்சூழல் தின கொண்டாட்டத்தை முன்னிட்டு மரம் நடும் விழா நடைபெற்றது. தலைமையாசிரியர் சுரேஷ் தலைமையில் மரம் நடு விழா நடைபெற்றது. மகிழ் முற்றம் அணிகளான குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் மற்றும் பாலை அணி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் கெவின் ரியாசன், ஜோஸ்வா ஜாஸ்மிதா, நித்யஶ்ரீ, மரிய ரெக்சிலின், கனிஷ்கா, தில்சன், சாம் விக்டர், திவ்யாஶ்ரீ மற்றும் உறுப்பினர்கள் பள்ளி வளாகத்தில் மரங்களை நட்டனர். இந்நிகழ்ச்சியில் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் முத்துக்குமார் ,காளீஸ்வரன், இடைநிலை ஆசிரியர்கள் முருகன், சகாய செல்வி, தன பாக்கியம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பொறுப்பு தலைமையாசிரியர் சுரேஷ் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றியும், வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும் என்றும் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.






# மண்ணிவாக்கம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது

மண்ணிவாக்கம், அக்.12-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றிய மண்ணிவாக்கம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம் மற்றும் துணைத் தலைவர் சுமதி லோகநாதன் அவர்கள் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது மண்ணிவாக்கம் ஊராட்சியில் உள்ள அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் திட்ட ஒருங்கிணைப்பாளர் அங்கன்வாடி ஊழியர்கள் சிற்றுண்டி வழங்கும் பொறுப்பாளர்கள் தூய்மை பணியாளர்கள் கிராம சுகாதார செவிலியர்கள் வேளாண்மை துறை அதிகாரிகள் மற்றும் கிராம பொதுமக்கள் காவல்துறையினர் கலந்து கொண்டனர் இந்த கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினார் அனைத்தும் கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்றப்படும் என்று ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம் உறுதியளித்தார் உடன் இருந்த காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.லோகநாதன், ஒன்றிய கவுன்சிலர் வி.சோமசுந்தரம் மற்றும் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.எஸ் கார்த்திக் மற்றும் வார்டு உறுப்பினர் அமுதா ரங்கநாதன், உஷா பிரபு, பூசாதேவி புன்னியகோட்டி, சுரேஷ், லட்சுமிநாகராஜ், குமார், பத்மாதெய்வசிகாமணி மல்லிகாபார்த்திபன், சேகர், பச்சையம்மாள் அண்ணாதுரை மற்றும் ஊராட்சி செயலாளர் பத்மநாபன் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

இறுதியில் ஊராட்சி செயலாளர் பத்மநாபன் மண்ணிவாக்கம் ஊராட்சியில் அனைத்து வளர்ச்சி திட்ட பணிகளை எடுத்துரைத்தனர்

# கோவையில் பிரபல கோ கிளாம் விற்பனை கண்காட்சி அவினாசி சாலையில் உள்ள சுகுணா மண்டப அரங்கில் தீபாவளி சிறப்பு விற்பனை கண்காட்சியை துவங்கியது



கோவை, அக்.12-

அக்டோபர் 10ந்தேதி துவங்கி மூன்று நாட்கள் நடைபெறும் இதில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு காட்டன் ஆடைகள், வீட்டு அலங்கார பொருட்கள், அணிகலன்கள், நகைகள், விற்பனைக்கான ,நூற்றுக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன..

கோவை, மற்றும் அதன் சுற்றுப்புற, பகுதிகளில் உள்ள ஷாப்பிங் செய்யும் பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே பெரும் வரவேற்பை பெற்ற 'கோ கிளாம்' ஷாப்பிங் கண்காட்சி கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வெவ்வேறு பண்டிகை மற்றும் பல்வேறு சீசன்களில் தமது விற்பனை கண்காட்சியை நடத்தி வருகிறது.

இந்நிலையில் தீபாவளி பண்டிகை சிறப்பு விற்பனை கண்காட்சியாக கோவை அவினாசி சாலையில் உள்ள சுகுணா மண்டப அரங்கில் கோ கிளாம் தமது விற்பனை கண்காட்சியை துவங்கியது.

அக்டோபர் 10,11,12 ந்தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ள இதில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள், பரிசு பொருட்கள்,வீட்டு அலங்கார பொருட்கள் என நூறுக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன..

குறிப்பாக அனைத்து சீசன்களுக்கான பல்வேறு விதமான ஆடைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன..

முன்னதாக, கோ க்ளாம் கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் ஹீனா மற்றும் ராகுல் தலைமையில் நடைபெற்ற கண்காட்சி துவக்க விழாவில், சிறப்பு விருந்தினர்களாக, மயில் தமிழ்செல்வி, ஹேமிகா, வாணி, ஜெயலட்சுமி, ராஜபாளையம் ஆனந்தாஸ் சனா, சாய் ,கீர்த்தனா, வித்யா மதி, ஶ்ரீநிதி, ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை துவக்கி வைத்தனர்.

கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்களான ஹீனா மற்றும் ராகுல் ஆகியோர் கோ கிளாம் ஷாப்பிங் கண்காட்சி குறித்து பேசுகையில்,

இந்த ஆண்டு பல்வேறு சீசன்களில் சிறப்பு விற்பனை கண்காட்சி நடைபெற்ற நிலையில், இந்த கண்காட்சியில் தீபாவளி பண்டிகை சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுவதாக தெரிவித்தனர்..

ஷாப்பிங் செய்ய வருபவர்களுக்கு தேவையான அனைத்து பொருட்களுக்கான அரங்குகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும்,

குறிப்பாக கண்காட்சியில், பெண்களுக்கான லேட்டஸ்ட் மாடல் ஆடைகள், கொல்கத்தா,

லூதியானா,குஜராத், டில்லி,ஜெய்ப்பூர்,புனே என இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பிரத்யேகமாக விற்பனை செய்யபடுவதாக தெரிவித்தனர்.

மேலும் கண்காட்சியில் ஆடை, ஆபரணங்கள், , குழந்தைகளுக்கான கைவினை பொருட்கள், பிரபல கலைஞர்களால் உருவாக்கப்பட்ட ஹேண்ட் பேக்குகள்,பிரத்யேக டிசைனில் உருவாக்கப்பட்ட காலணிகள் பெண்களுக்கான, ஜிமிக்கி கம்மல், வளையல்,வெள்ளி அணிகலன்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

மேலும் கோடை காலத்திற்கு ஏற்ற வகையில் பெண்கள் பயன்படுத்தும் இயற்கை முறையிலான அழகுக்கலை பொருட்கள், சிகை அலங்கார பொருட்கள், முக அலங்கார பொருட்கள், வாசனை திரவியங்கள் போன்றவற்றிற்கு தனி தனி அரங்குகள் அமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்..

அக்டோபர் 12 ந்தேதி வரை நடைபெற உள்ள இதில் கோவை, திருப்பூர், ஈரோடு ,நாமக்கல், உதகை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் வாடிக்கையாளர்கள் வந்து பொருட்களை ஆர்வமுடன் வாங்கி செல்வதாக தெரிவித்தனர்.



# செங்கல்பட்டு மாவட்டம், பொன்மார் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

பொன்மார், அக்.12-

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், பொன்மார் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (அக் : 11) ஊராட்சி மன்ற தலைவர்., எஸ்.நாராயணன் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மழைக்காலங்களில் டெங்கு விழிப்புணர்வு பற்றி பொதுமக்களுக்கு பொன்மார் அரசு மருத்துவர்., ரீனா அறிவுரை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை கூட்டத்தில் எடுத்துரைத்தார். உடன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மற்றும் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி செயலர்.,காளீஸ்வரி உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





# செங்கல்பட்டு மாவட்டம், மதுரபாக்கம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

பொன்மார், அக்.12-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மதுரப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (அக் 11) ஊராட்சி மன்ற தலைவர்., மு. வேல்முருகன் மற்றும் மதுரபாக்கம், அகரம்தென், திருவஞ்சேரி, ஒட்டியம்பாக்கம் ஊராட்சிகளின் ஒன்றிய கவுன்சிலர்மான : அமுதா முருகன் தலைமையில் கோவிலாஞ்சேரி ஊராட்சி மன்ற அலுவலக வாளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உடன் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# காட்டுமன்னார்கோயில் அருகே நிலத்தில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்ட தாய் மகன் பரபரப்பு காணப்பட்டது

காட்டுமன்னார்கோயில், அக்.12-

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் வட்டம் திரு மூலஸ்தானம் கைலாசநாதர் கோயில் தெருவை சேர்ந்தவர் விக்னேஷ் வயது 32 இவர் கடந்த மூன்று தலைமுறையாக அதாவது அவரது முப்பாட்டன் மற்றும் தந்தை அவர்கள் ஆண்டு அனுபவித்து வந்த காட்டுமன்னார்கோவில் ரிஜிஸ்டர் ஆபீஸ் உட்பட்ட பேரூராட்சி எல்லையில் பட்டா எண் 144 சர்வே எண் 9/1 இல் 0.53.50 ஏர்ஸ் நிலத்தினை பயிர் செய்து வந்துள்ளார்

அதற்கு முறையாக அரசாங்கத்திடம் நிலத்தின் வரி உள்ளிட்ட அனைத்து வரிகளும் கட்டி வந்த நிலையில் சம்பந்தப்பட்ட சார்பதிவு அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவல கிராம நிர்வாக அலுவலரிடம் இந்த நிலத்தில் நான் பயிர் செய்து வருகிறேன் இதில் தனிநபர் யாருக்கும் பத்திரப்பதிவு செய்யக்கூடாது அளவீடு செய்யக்கூடாது என முன்கூட்டியே மனு கொடுத்து வந்த நிலையில்

நிலத்திற்கு சம்பந்தமே இல்லாத நபர்கள் திடீரென வந்து இந்த இடத்தை நாங்கள் அளவீடு செய்ய போகிறோம் இந்த இடம் எங்களுக்கு சொந்தமான இடம் எனக் கூறி காட்டுமன்னார்கோயில் வருவாய்த்துறை மூலம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் ஆகியோர் அளவீடு செய்ய வந்துள்ளனர்

இதனால் பதறிப் போன விக்னேஷ் மற்றும் அவரது தாய் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று நிலம் நாங்கள் மூன்று தலைமுறையாக பயிற்சி செய்து வருகிறோம். இந்த நிலம் நாங்கள் அழிவு செய்ய விட மாட்டோம் இது சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் நிலைமையில் உள்ளது நீங்கள் நீதிமன்றம் மூலம் தீர்வு காணுங்கள் என்று நிலத்தின் அருகே அமர்ந்து திடீரென தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர் தகவல் அறிந்து வந்த காட்டுமன்னார்கோயில் காவல்துறையினர் சம்பந்தப்பட்ட விடம் பேச்சுவார்த்தை செய்தனர் அவர்களிடம் நீங்கள் இருவரும் முறையாக நீதிமன்றம் மூலம் தீர்வு செய்து கொள்ளுங்கள் என கூறி சென்றனர் இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு காணப்பட்டது மேலும் இது குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து நான் எனது முப்பாட்டன் முதல் தந்தை வரை நான் பயிர் செய்து நிலத்தை எனக்கு மீட்டு தர வேண்டும் என கோரிக்கை வைத்தார்.



# 191வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஜெ.எல்.லட்சுமி ஆயுத பூஜையை முன்னிட்டு பொதுமக்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி

ஜல்லடையன்பேட்டை, அக்.12-

அ.தி.மு.க.,191வது வார்டு மாமன்ற உறுப்பினர், ஜெ. எல். லட்சுமி ஆயுத பூஜையை முன்னிட்டு சென்னை அடுத்த சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஜல்லடையன்பேட்டையில் (அக் :10) ஶ்ரீ சாய் மஹாலில் துப்புரவு பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு ஒவ்வொரு நபருக்கும் 7.5 லிட்டர் கொள்ளளவு கொண்ட சமையல் குக்கர் , 500 ரூபாய் பரிசு பொருட்கள் வழங்கிய ஆயுத பூஜையை கொண்டாடினார்கள். பரிசு பொருட்கள் வழங்கி மாமன்ற உறுப்பினரை பொதுமக்கள் வாழ்த்தி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# குடியாத்தம் அடுத்த உள்ளி ஊராட்சியில் காந்தி ஜெயந்தி முன்னிட்டு கிராம சபா கூட்டம்

## கோட்டாட்சியர் செல்வி. சுபலட்சுமி பங்கேற்பு

வேலூர், அக்.12-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, உள்ளி ஊராட்சியில் காந்தி ஜெயந்தி முன்னிட்டு, கிராம சபா கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் வி.ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு கண்காணிப்பு மற்றும் பார்வையாளராக குடியாத்தம் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கோரிக்கையாக அளித்த மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுத்து வசதிகளை செய்து தருவதாக பொதுமக்களுடன் கனிவுடன் உரையாடினார். இக்கூட்டத்தில் பல்வேறு அடிப்படை வசதிகள் குறித்து பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்தில் வட்டாட்சியர் பழனி, டி எஸ் பி சுரேஷ், காவல் ஆய்வாளர் விஸ்வநாதன் காவல் உதவி ஆய்வாளர்கள் காவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து அலுவலர் ஏழுமலை, அங்கன்வாடி பணியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர் வெங்கடாஜலபதி, ஊராட்சி செயலாளர் சுரேஷ்பாபு மற்றும் பல்வேறு துறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் ஊர்பொதுமக்கள் என பலர் திரளாக கலந்து கொண்டு இந்த சபா கூட்டத்தை சிறப்பித்தனர்.




# காட்பாடி அடுத்த மேல்பாடி ஊராட்சியில் காந்தி ஜெயந்தி முன்னிட்டு கிராம சபா கூட்டம்

## மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங்கேற்றார்

வேலூர், அக்.12-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, மேல்பாடி ஊராட்சியில், அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு, கிராம சபா கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி பங்கேற்று சிறப்புரையாற்றி, மக்களோடு மக்களாக மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வண்ணம் கனிவுடன் உரையாடி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 6மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 1,30,370 / மதிப்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், சக்கர நாற்காலிகள், காதுக்குப் பின்புறம் அணியும் நவீன காதொலி கருவிகளை வழங்கினார். இக்கூட்டத்தில் காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வே.வேல்முருகன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமால், மேல்பாடி ஊராட்சி மன்ற தலைவர் நித்தியானந்தம், காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நந்தகுமார், கனகராஜ், ஊராட்சி மன்ற செயலாளர் தயாளன், துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பிக்சஸ் டெக்னாலஜியின் பசுமை கோயம்புத்தூர் திட்டம்

கோவை, அக்.12-

கோவையில் செயல்படும் பிக்சஸ் டெக்னாலஜிஸ் நிறுவனம் தனது 5வது ஆண்டு விழாவை முன்னிட்டு, பசுமை கோயம்புத்தூர்திட்டத்தின் ஒரு பகுதியாக 5,000 மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கியுள்ளது.

இந்த நிறுவனம் 2020 ஆம் ஆண்டு கோகிலா கணேசன், லியோ சர்னி, மற்றும் மாறன் சுப்பிரமணியம் ஆகியோரால் 60 சதுர அடி அறையில் தொடங்கப்பட்டது. இன்று இது 75க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப நிபுணர்களுடன் ஒரு முன்னணி நிறுவனமாக வளர்ந்து, ஐடி ஆட்டோமேஷன், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் மார்க்கெட்டிங், மற்றும் வணிக ஆலோசனை போன்ற துறைகளில் சேவைகள் வழங்குகிறது.

5 ஆண்டுகளில் தொழில்நுட்ப வளர்ச்சியை அடைந்த பிக்சஸ், தற்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் பங்களிப்பு செய்து வருகிறது. முன்பு உடுமலைப்பேட்டை தளி பகுதியில் 10,000 மரக்கன்றுகள் நடும் திட்டத்தை நடத்தியது.

நிறுவனர் கோகிலா கணேசன் கூறியதாவது

எங்கள் வளர்ச்சி ஒரு தொடக்கம் மட்டுமே. தொழில்நுட்பத்தையும் சமூக நலனையும் இணைத்து, வருங்கால சந்ததிக்கு பாதுகாப்பான சுற்றுச்சூழலை உருவாக்குவதே எங்கள் நோக்கம் என தெரிவித்தார் பிக்சலஸ்டெக்னாலஜிஸ் தனது 5 ஆண்டு சாதனையை பசுமை பணிகளுடன் கொண்டாடி, தொழில்நுட்ப வளர்ச்சியுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் முன்னிலை வகிக்கிறது.

# டாக்டர் என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரியின் 25 வது பட்டமளிப்பு விழா




கோவை, அக்.12-

கோவை காளப்பட்டி பகுதியில் உள்ள டாக்டர் என்ஜி.பி கலை அறிவியல் கல்லூரியில் 25வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள என்.ஜி.பி.கலையரங்கில் கோவை மருத்துவ மைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக் கட்டளையின் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி தலைமையில் நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவில் டாக்டர் என்ஜி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செயலர் மருத்துவர் தவமணிதேவி பழனிசாமி, கோவை மருத்துவ மைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக் கட்டளையின் அறங்காவலர் மருத்துவர் அருண் பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் தெற்கு மண்டல இயக்குனரும், உஸ்மானியா பல்கலைக்கழக சமூகவியல் துறைப் பேராசிரியருமான முனைவர் B.சுதாகர் ரெட்டி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கிச் சிறப்புரையாற்றினார். சுதாகர் ரெட்டி கூறியது, பட்டம் பெற்ற மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துக்கள், தாங்கள் பெற்ற பட்டத்தை வைத்து வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றார். மாணவர்கள் அர்ப்பணிப்புடன் கற்றல் செயல்பாடுகளில் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும். டாக்டர் என்ஜி.பி. கல்வி நிறுவனம் மாணவர்களின் வளர்ச்சியிலும், சமூக வளர்ச்சியிலும் அக்கறை உடன் செய்யலாற்றுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது, மேலும் சர்வதேச அளவில் பல்வேறு துறை சார்ந்த வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு மாணவர்கள் தங்களை தகுதி படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் பல்வேறு ஆராய்ச்சி வாய்ப்புகளையும் வசதிகளையும் இந்நிறுவனம் செய்து கொடுக்கிறது. இதனை மாணவர்கள் சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கூறினார். அதனைத் தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் முனைவர் சு. சரவணன் பட்டமளிப்பு உறுதிமொழியை வழங்கினார்.


இந்த விழாவில் மொத்தமாக 1992 இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் பட்டம் பெற்றனர். இளங்கலையில் 1479 மாணவர்களும், முதுகலையில் 431 மாணவர்களும், பல்கலைக்கழகத் தரவரிசையில் முதலிடம் பெற்ற இளங்கலை 54 மாணவர்களும் முதுகலையில் 431 மாணவர்களும், பட்டம் பெற்றனர். இந்நிகழ்வில், என்.ஜி.பி. கல்வி குழுமங்களின் முதன்மைச் செயல் அலுவலர் முனைவர் ஓ.டி.புவனேஷ்வரன், என்.ஜி.பி. கல்வி குழுமங்களின் இயக்குனர் முனைவர் பெ.இரா. முத்துசாமி, புல முதன்மையர்கள் மற்றும் துறைத் தலைவர்கள். பேராசிரியர்கள், அலுவலர்கள். பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.



# பெண்ணாத்தூரில், என்.செல்வராஜ் தலைமையில், முன்னாள் பேரூராட்சி தலைவர் அருள்நாதன் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

வேலூர், அக்.12-

வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த பெண்ணாத்தூர் பேருராட்சி, பெண்ணாத்தூர் பேரூராட்சி தி.மு.க செயலாளரும், முன்னள் பேரூராட்சி கூட்டுறவு சங்க தலைவர், அரசு மேல்நிலை பள்ளி ஆசிரியர் சங்க தலைவருமான அருள்நாதன் (10.10.2025 ) பிறந்தநாள் முன்னிட்டு, பெண்ணாத்தூர் என். செல்வராஜ் தலைமையில் அருள்நாதன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி, மலர்மாலை, சந்தன மாலை அணிவித்து, கேக் வெட்டி, இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது சங்கரன்பாளையம் பாலாஜி, பைனான்சியர் முத்து, கௌதம், கேண்டீன் பாலாஜி, நவீன், சரண் மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்து பிறந்தநாள் விழாவை சிறப்பித்தனர்.



# காவிரி ஆற்றில் வெள்ளப் பெருக்கு: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 29,540 கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர், அக்.12-

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 6,033 கன அடியிலிருந்து 29,540 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடகா அணைகளான கபினி, கே.ஆர்.எஸ் அணைகளின் கீழ் பகுதிகளான பெங்களூரு மாண்டியா ஆகிய பகுதிகளில் நேற்று கனமழை பெய்தது. இதன் காரணமாக, காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து நேற்றிரவு முதலே அதிகரிக்க தொடங்கியது.

அதன்படி, அணைக்கான நீர்வரத்து நேற்று விநாடிக்கு 6,033 கன அடியாக இருந்த நிலையில் இன்று விநாடிக்கு 29,540 கன அடி அதிகரித்துள்ளது. அணைக்கான நீர்வரத்து அதிகரித்ததன் காரணமாக நீர்மட்டம் நேற்று 111.48 அடியாக இருந்த நிலையில் இன்று 112.48 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு நேற்று 80.53 டிஎம்சியில் இருந்து இன்று 81.98 டிஎம்சியாகவும் உயரந்துள்ளது.

அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு விநாடிக்கு 12,000 கன அடியும், கிழக்கு, மேற்கு வாய்க்கால் பாசனத்துக்கு 500 கன அடி நீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையில் இருந்து வெளியேற்றப்பட்டு வரும் நீரின் அளவு குறைவாக இருப்பதாலும், அணைக்கு வரும் நீரின் அளவு அதிகமாக இருப்பதாலும் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இதனிடையே, அணையின் 16 கண் மதகு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வெள்ளக் கட்டுப்பாட்டு மைய அறையில் நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து நீரின் அளவை கண்காணித்து வருகின்றனர். குறிப்பாக, கடந்த 100 நாட்களுக்கு மேலாக வெள்ளக் கட்டுப்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# குடியாத்தம் அடுத்த வளத்தூர் ஊராட்சியில் காந்தி ஜெயந்தி முன்னிட்டு கிராம சபா கூட்டம்

வேலூர், அக்.12-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, வளத்தூர் ஊராட்சியில் காந்தி ஜெயந்தி முன்னிட்டு கிராம சபா கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் அதிமுக எஸ். நிர்மலா சேட்டு தலைமையில் நடைபெற்றது. இந்த கிராம சபா கூட்டத்தில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு அடிப்படை வசதிகள் குறித்து கோரிக்கை மனுக்களை வழங்கினர். இதனைத் தொடர்ந்து பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து தீர்மானங்கள் வாசிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் ஒன்றிய குழு உறுப்பினர் எஸ் பிரியா சக்திவேல், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர் ஆர். விஜயேந்திரன், ஊராட்சி செயலாளர் ஆர்.ரேவதி, அரசு பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவரும், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை முன்னாள் இணை இயக்குநரும், சமூக சேவகர்மான இ.சேகரன், அங்கன்வாடி பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு கிராம சபா கூட்டத்தை சிறப்பித்தனர்.



# ராமேசுவரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம், கண்டன ஆர்ப்பாட்டம்

ராமநாதபுரம், அக்.12-

இலங்கை சிறையில் உள்ள 30 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி, ராமேசுவரம் மீனவர்கள் இன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை தொடங்கினர். இலங்கையின் தொடர் நடவடிக்கையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த புதன்கிழமை மீன்பிடிக்கச் சென்ற 4 விசைப்படகுகளையும், அதிலிருந்த 30 மீனவர்களையும் எல்லைதாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படை கைது செய்தது. கைது செய்யப்பட்ட மீனவர்களை அக்.23 ம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனையடுத்து மீனவர்கள் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்களின் இந்த கைது நடவடிக்கையை கண்டித்தும், இலங்கை சிறையில் உள்ள 30 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும் இன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை ராமேசுவரம் மீனவர்கள் தொடங்கினர்.

இந்நிலையில், இக்கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று மீனவர்கள், இலங்கை சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினர் ராமேசுவரம் மீன்பிடி துறைமுகம் அருகே மீன்வளத்துறையின் மீன்பிடி அனுமதி சீட்டு வழங்கும் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மீனவ சங்க பிரதிநிதிகள் ஜேசுராஜ், என்.ஜெ.போஸ், எமரிட், சகாயம், எமரால்டு உள்ளிட்ட மீனவ சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் இலங்கை கடற்படைக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். மேலும், இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் உடனடியாக படகுடன் மீட்டு தாயகம் அழைத்து வருவதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்களின் குடும்பத்தினர் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர். கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறையில் உள்ள மீனவரின் மனைவி மஞ்சு ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தில் திடீரென மயங்கி விழுந்தார். இதையடுத்து அங்கிருந்த பெண்கள் மஞ்சுவுக்கு தண்ணீர் மற்றும் குளிர்பானம் கொடுத்து அமர வைத்தனர்.



# காட்பாடியில் பதிவாளர் கட்டிடம் திறப்பு விழாவில் அமைச்சர்களுக்கு, வெள்ளி வீர வாள் வழங்கி சிறப்பிப்பு

வேலூர், அக்.12-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கிளித்தன்பட்டரை அருகே, காட்பாடியில் ரூ.1.87 கோடி மதிப்பில் புதியதாக கட்டப்பட்ட காட்பாடி சார்பதி வாளர் அலுவலகம் திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி மற்றும் பத்திரப்பதிவு உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டிடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, குத்து விளக்கேற்றி சிறப்பித்து அலுவலகத்தை பார்வையிட்டு சிறப்புரை யாற்றினர். இவ்வி ழாவில் அமைச்சர்களுக்கு, பதிவுதுறை உயர் அதிகாரிகளுக்கு, சிறப்பு வரவேற்புகளாக சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த, 5வது வட்ட (திமுக) செயலாளரும், விநாயகா ரியல் எஸ்டேட், விநாயகா பில்டர்ஸ் நிறுவன தொழிலதிபரும் மற்றும் மக்கள் சேவையில் உயர்ந்த உள்ளம் கொண்ட சமூக சேவகருமான பி. விநாயகம், அவருடைய மகள் ஹர்ஷவர்த்தினி ஆகியோர் வெள்ளி வீர வாள் வழங்கி சிறப்பித்தனர், காட்பாடியில் மக்களுக்காக பல்வேறு திட்டங்களைப் பெற்றுத் தந்து சாதனைகளை வித்திட்டு செயல்படுத்தி வரும் அமைச்சர்களுக்கு வெள்ளி வீர வாள் வழங்கி சிறப்பித்து வாழ்த்து தெரி வித்து ஆசிபெற்றனர்.



# குடியாத்தம் மீனூரில் வெங்கடேச பெருமாள் ஆலயத்தில், புரட்டாசி மாத சனிக்கிழமை முன்னிட்டு, புதிய நீதி கட்சி சார்பில், சிறப்பு பூஜைகளுடன் அன்னதான விழா

வேலூர், அக்.12-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, மீனூர் கிராமத்தில், அருள்மிகு வெங்கடேச பெருமாள் சன்னிதானத்தில், புதிய நீதி கட்சி மற்றும் திருமலா அன்னதான கமிட்டி சார்பில், புரட்டாசி மாதம், நான்காம் சனிக்கிழமை முன்னிட்டு பெருமாளுக்கு சிறப்பு அலங்காரத்துடன் சிறப்பு பூஜைகள் மற்றும் அன்னதானம், குடியாத்தம் புதிய நீதி கட்சி குடியாத்தம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மற்றும் முன்னாள் நகர செயலாளர் பாரத் மகி மகேந்திரன் ஏற்பாட்டில், நகர செயலாளர் கைத்தறி காவலனுமான எஸ்.ரமேஷ் மற்றும் மாவட்ட இளைஞரணி செயலாளர் ராஜ்குமார் தலைமையில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் முரளி, நகர இளைஞரணி துணைச் செயலாளர் பார்த்திபன், நகர மாணவரணி செயலாளர் ராகுல், குணா, புதிய நீதி கட்சி பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பொன்னாகுளம், அரசனி முத்துப்பட்டியில் கிராம சபைக் கூட்டம்: வட்டார வளர்ச்சி அலுவலர் அருள்பிரகாசம், ஆட்சியர் நேர்முக உதவியாளர் ரமேஷ் பங்கேற்றார்கள்

சிவகங்கை, அக்.12-

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம் பொன்னாகுளம் ஊராட்சி பனையூர் கிராமத்தில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது...

ஊராட்சி எழுத்தர் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இந்த கிராம சபைக்கூட்டத்தில் ஒன்றியப் பற்றாளர் ஷகீலா , கிராம நிர்வாக அலுவலர் அய்யனார் , மகளிர் திட்டம் குழலி , ஆசிரியர்கள், மக்கள் நலப் பணியாளர் முருகன் , கணிணி இயக்குனர் அர்வித், பணித்தளப் பொறுப்பாளர்களான துக்கால் கன்னகி , பொன்னாகுளம் செல்வராணி , வீரவலசை , முத்துலெட்சுமி, பனையூர் சுகவள்ளி , உள்ளிட்ட கிராமப் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினர்...

இதேபோல் அரசனி முத்துப்பட்டி ஊராட்சி முத்துப்பட்டியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சி எழுத்தர் வீரவலசை





மூர்த்தி தலைமையில் நடைபெற்றது...

வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சிகள் அருள்பிரகாசம் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வளர்ச்சி , ரமேஷ் , கிராம நிர்வாக அலுவலர் கரிகாலன், கிராம நிர்வாக உதவியாளர் சுருளிப்பாண்டி , வட்டார வளர்ச்சி அலுவலக எழுத்தர் பாலாஜி , திட்ட ஒருங்கிணைப்பாளர் சங்கர் கணேஷ் , அலுவலக உதவியாளர் பாலுச்சாமி, தன்னார்வலர் சோமன் , ஆசிரியர் கலையரசன் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்...

கூட்டத்தில் தனியார் நிதி நிறுவனமான நியோமேக்ஸ் கம்பெனியில் முதலீடு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு அரசு உதவ வேண்டும், மதுரை பொருளாதாரக் குற்றப்பிரிவு காவல்துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டது...

பொதுமக்கள் பலர் கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்..







# தீயணைப்பு துறையின் சார்பில், பட்டாசு வெடிப்பது குறித்து, விழிப்புணர்வு பயிற்சி

மானாமதுரை, அக்.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தீயணைப்பு துறை சார்பில், 'விபத்தில்லா தீபாவளி' கொண்டாடுவது மற்றும் வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது அதில் பட்டாசு வெடிக்கும் வழிமுறை, பாதுகாப்பு உபகரணங்கள் வைத்திருத்தல், பட்டாசு வகைகள், தீ விபத்தில் மீட்பு பணி, வடகிழக்கு பருவ மழையில் முன்னெச்ச ரிக்கை குறித்து, தீயணைப்பு அலுவலர் தலைமையில் வீரர்கள் செயல் விளக்கம் அளித்தனர். அதேபோல் தீயிலிருந்து உயிர்களையும் உடைமைகளையும் காப்பதோடு இயற்கை இகர்பாடுகளான வெள்ளம் புயல்நிலைசரிவுகள் மனிதர்களால் ஏற்படுத்த ப்படும் அழிவுகளில் இருந்து மக்களை காப்பது குறித்து விழிப்புணர்வு நடந்தது.

மானாமதுரை தீயணைப்பு நிலைய அலுவலர் ரமேஷ் தலை மையில் மற்றும் வீரர்கள், மானாமதுரை பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தீபாவளி பண்டிகைக்கு விபத்து ஏற்படாமல் பட்டாசு வெடிப்பது குறித்து விழிப்புணர்வு விபத்தை தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, துண்டு பிரசுரம் வழங்கினார்.





# Women's League Foundation மாற்று திறனாளிகளுக்கு சணல் பை தாயாரிப்பு சுயதொழில் பயிற்சி இலவசமாக வழங்கபட்டது

சென்னை, அக்.12-

சென்னை கண்ணகிநகரில் Women's League Foundation மற்றும் தனியார் நிறுவனம், வானம் வசப்படும் என்ற மாற்று திறனாளிகள் அமைப்பினரரும் இணைந்து மாற்று திறனாளி சுயமாக யாருடைய எதிர்பார்புமின்றி தங்களது வாழ்வாதரத்திற்கு தேவையான பொருளாதரத்தை ஈட்டும் வகையில் சணல் பை தயாரிப்பு சுய தொழில் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி இன்று தொடங்கப்பட்டது.

15 நாட்கள் நேரடி பயிற்சியாக சணல் பைகள் தயாரிக்கும் பயிற்சி 30 மாற்று திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

தேர்ந்தெடுத்த பயிற்சி பெற்ற வல்லுனர்களை கொண்டு பர்ஸ், பேக், பைல், தாம்பூல பைகள் ஆகியவற்றை தயாரிப்பது குறித்து, இந்த பயிற்சியில் கற்றுத்தரப்பட உள்ளது. மேலும் பயிற்சிக்கு தேவையான மெட்டீரியல்களும் இலவசமாகி வழங்கி மாற்று திறனாளிகளுக்கு பயிற்சி அளித்து இதன் மாதம் 8 ஆயிரம் வருமான கிடைக்கும் அளிவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# முந்திரி, பாதாம், பிஸ்தா தின்று வளர்ந்த எருமை மாட்டின் விலை ரூ.8 கோடி

புதுடெல்லி, அக்.12-

உத்தரபிரதேச மாநிலம் மீரட்டில் சர்தார் வல்லப பாய் பட்டேல் வேளாண் பல்கலைக்கழக. வளாகத்தில் விவசாயிகளுக்கான சிறப்பு சந்தை நடைபெறுகிறது.

இதில் வட மாநிலங்களின் விவசாயிகள் பலர் பங்கேற் கின்றனர். ஹரியானாவின் விவசாயியான நரேந்திரசிங் கும் தனது எருமையை இங்கு காட்சிக்கு வைத்துள்ளார். மீரட் சந்தையில் இந்த ஹரியானா மாநில எருமைக்கு ரூ.8 கோடி விலை வைக்கப்பட்டுள்ளது. எனினும், அதன் உரிமையாளர் நரேந்திரசிங் தன் எருமையை விற்பனை செய்ய விருப்பம் இல்லை எனத் தெரிவித்துள்ளார். அந்த எருமைக்கு 'எம்எல்ஏ' என அதன் உரிமையாளர் பெயர்சூட்டியுள்ளார்.

இது குறித்து விவசாயி நரேந்திரசிங் கூறுகையில், 'எனது எருமை முர்ரா எனும் உயர்வகை இனத்தைச் சேர்ந்தது. இதற்கு அன்றாட உணவாக எட்டு லிட்டர் பால், நெய், முந்திரி, பாதாம், பிஸ்தா ஆகியவை உள் ளது. கடந்த 2 வருடங்களாக வட மாநிலங்களின் எந்த சந்தைக்கு சென்றாலும் எனது எம்எல்ஏவிற்கு சிறப்பு பரிசு கிடைத்து வருகிறது.' என்றார்.

ஹரியானா விவசாயி நரேந்திரசிங் பத்மஸ்ரீ விருது பெற்றவர். தனது எருமையின் உயிரணுவை விற்று அவர் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் ஈட்டுகிறார்.

# விக்கிரவாண்டி அருகே 2,000 ஆண்டுகள் பழமையான பொருட்கள் கண்டெடுப்பு

விக்கிரவாண்டி, அக்.12-

விக்கிரவாண்டி அருகேயுள்ள வீடூர் மற்றும் வழுதாவூரில் 2,000 ஆண்டுகள் பழமையான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரசுக் கலைக்கல்லூரி பேராசிரியர்கள் நடத்திய ஆய்வில் பல்வேறு பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதால், அப்பகுதிகளில் அகழாய்வு நடத்த வேண்டும் என கோரிக்கை எழுந்ததுள்ளன.



# தர்மபுரி - அரூரில் ரிலையன்ஸ் டிஜிட்டல் திறப்பு விழா

அரூர், அக்.12-

ரிலையன்ஸ் டிஜிட்டல் இப்போது தனது புதிய கடையை தர்மபுரி மாவட்டம், அரூர், திரு.வி.க. நகரில் திறந்துள்ளது. 5240 சதுர அடி பரப்பளவு கொண்ட டெக்னாலஜிக்கான இந்தக் கடையில் வாங்கிய பின்னர் எலக்ட்ரானிக்ஸை பராமரிப்பதற்கான அர்ப்பணித்துக் கொண்ட உதவிக்கான எக்ஸ்பெர்ட் டெக் ஸ்குவாட் மற்றும் ரெஸ்க்யூ சர்வீஸ் எக்ஸ்பெர் ட்களும் உள்ளனர். விரைவான டெலிவரி மற்றும் பொருத்துதல் மூலமாக வாடிக்கையாளர்கள் எந்தவித தாமதமும் இல்லாமல் தங்கள் அபிமான டெக்னாலஜியை அனுபவித்து மகிழலாம்.

புதிய கடையில் வாடிக்கையாளர்கள், முன்னதாக வருவோ ருக்கான அட்டகாசமான சலுகைகள் மூலம் முன்னணி வங்கி கார்டுகளில் 10% வரை கேஷ்பேக் பெறலாம். ரிலையன்ஸ் டிஜிட்டல், 500க்கும் அதிகமான தேசிய மற்றும் சர்வதேச பிராண்ட்களின் 2000க்கும் அதிகமான தயாரிப்புகளை வழங்குகிறது. இதில் லேட்டஸ்ட் ஸ்மார்ட் போன்கள், ஸ்மார்ட் டிவிகள், வாஷிங் மெஷின்கள், ரெஃப்ரிஜெரேட்டர்கள், ஹோம் தியேட்டர்கள், டிஜிட்டல் கேமராக்கள், லேப்டாப்கள் , அக்ஸசரீஸ் மற்றும் சிறிய எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் உட்பட பல வகை எலக்ட்ரானிக்ஸ மற்றும் ஹோம் அப்ளையன்சஸ் விற்கப்படுகின்றன. தொழில்நுட்பத்தை தனித்து வமாக்கும் உண்மையான நோக்கத்துடன் ரிலையன்ஸ் டிஜிட்டல் எளிதில் வாங்கத் தக்க விலையில் உலக டெக்னாலஜி வாய்ப்புகளை வழங்குவதைக் குறிக் கோளாகக் கொள்கிறது. ஈசி ஈஎம்ஐ உட்பட பலவகை கடனுதவி வாய்ப்புகளுடன் எலக்ட்ரானிக்ஸ்களில் ஒப்பற்ற டீல்களை வழங்கு வதன் மூலம் ரிலையன்ஸ் டிஜிட்டல், ஒவ்வொரு வாடிக்கையாளரும் தங்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்ற தொழில்நுட்பத்தை பெற உதவுவதை நோக்கமாகக் கொள்கிறது.

# எஸ்.டி.என்.பி மகளிர் வைணவக் கல்லூரியில் பள்ளி முதல்வர்கள் மாநாடு

குரோம்பேட்டை, அக்.12-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் அமைந்துள்ள ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரியில் டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி முதல்வர்கள் மாநாடு அக்டோபர் 10, 2025 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இம்மாநாட்டின் துவக்கவிழாவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் டாக்டர் ஆர்.ஆனந்தக்குமார், ஐ.ஏ.எஸ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இம்மாநாட்டை ஏற்பாட்டு செய்த கல்லூரி நிர்வாக த்தைப் பாராட்டியதோடு, இனிவரும் காலங்களில் ஆசிரியர், மாணவர்கள் மட்டுமல்லாது, பெற்றோர் களையும் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை வழங்கினார். தொடர்ந்து, வாசிப்பின் முக்கியத்துவம், உணர்ச்சி நுண்ணறிவு மற்றும் நேர மேலாண்மை பற்றிய ஆழமான சிந்தனைக ளைத் தன் வாழ்வியல் அனுபவங்களோடு அவர் பகிர்ந்து கொண்டவிதம் மாணவர்களுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் உற்சாகத்தை அளித்தது.




"Redefining Readiness: From Higher Secondary to Higher Education" என்ற தலைப்பில் நடைபெற்ற இம்மாநாடு, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் உயர் கல்விக்குச் செல்லும் படிநிலையில் எதிர்கொ ள்ளும் சவால்களைச் சமாளிக்க, கல்வியாளர்கள், உளவியலாளர்கள் மற்றும் தொழில் நுட்ப நிபுணர்கள் ஒருங்கிணைந்து விவாதிக்க ஒரு சிறந்த தளமாக அமைந்தது. இவ்விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மாணவர்களுக்கு, உயர்கல்வி குறித்ததான திட்டமிடலுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

இம்மாநாட்டில் சென்னையைச் சுற்றியுள்ள அரசு பள்ளிகள் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் என 34 பள்ளிகளிலிருந்து சுமார் 600 மாணவர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் நீண்டகால மாகக் கல்வி பணியில் சேவையாற்றிவரும் 21 பள்ளிகள் மற்றும் 17 பள்ளி முதல்வர்களுக்கு விருதுகளும், நிகழ்வில் கலந்துகொண்ட 100 ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

இம்மாநாட்டின் மூலம் எஸ்.டி.என்.பி. மகளிர் வைணவக் கல்லூரி, கல்வி புதுமை, மகளிர் மேம்பாடு மற்றும் கல்வித் தலைமைத்துவம் ஆகியவற்றில் தன் அர்ப்பணிப்பை மறுபடியும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரி சேர்மன் மம்தா டி பட், கல்லூரி பொறுப்பு முதல்வர் எஸ்.லெப்டினன்ட் முனைவர் கே.காந்திமதி, கல்லூரியின் சுயநிதிப் பிரிவின் இயக்குனர் முனைவர் எம்.எஸ்.விஜயா, துணை முதல்வர் முனைவர் யோ. கலைவாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வின் வெற்றிக்குப் பல்துறை முதன்மையர்கள் முக்கியமானவர் பங்கேற்றனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161